# மெட்ரோ ரயிலில் குழந்தைகளுடன் அமைச்சர்

சென்னை, ஜூன் 13–
குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தையொட்டி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர், நிலோபர் கபில், குழந்தைகளுடன் நேற்று, மெட்ரோ ரயிலில் பயணம் செய்தார்.

குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினத்தையொட்டி, தொழிலாளர் நலத்துறை சார்பில், நேற்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

குழந்தை தொழிலாளர் இல்லாத நிலை வேண்டும் என்பது குறித்து, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, அமைச்சர் நிலோபர் கபில், பள்ளி குழந்தைகளுடன், சென்னை, டி.எம்.எஸ்., நிலையத்தில் இருந்து, விமான நிலையம் வரை, மெட்ரோ ரயிலில் பயணம் செய்தார்.

அவருடன், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மை செயலர், சுனில் பாலிவால், தொழிலாளர் ஆணையர், நந்தகோபால், நடிகர் விஜய் ஆன்டனி ஆகியோரும் பயணித்தனர்.